1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1,000 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர் பதன சாதனங்களை ஊட்டியிலுள்ள விஜய நகரம் பண்ணையில் ஒன்றும் மற்றொன்று சென்னையிலும் நிறுவுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, potatoes are grown in large quantities in the Hosur taluk, next to the Nilgiris. The quality and taste of the potato is very fine and some good potato cultivators there have won prizes. As it is a delicate crop a cold storage plant is absolutely necessary. May I know whether a cold storage plant will be sanctioned for Hosur taluk?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, ஊட்டியில் கட்ட விருக்கும் அந்த வேலை எப்பொழுது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சமீபத்திலே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது; விரைவில் வேலை துவங்கும், முடிக்கப் படும்.

Ennore Thermal Power Station

*103 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether a large quantity of control, production metering and H. V. Bus duct equipments have been purchased for the Ennore Thermal Power Station during 1970-71-72; and

(b) the cost at which they were purchased?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, 1970, 71, 72-ம் ஆண்டுகளில் மீட்டர் வழங்கவில்லை என்றால், எப்படி அவை இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்பொழுது வரவழைக்கப் படவில்லை. புதிதாக வழங்க ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது.

Death of electricity worker at Cumbum

*104 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether an electricity worker died on 24th July 1971 at Cumbum in Madurai District while on duty due to electric shock;

(b) if so, the amount of compensation paid to his family: and

(c) the steps taken to prevent recurrence of such accidents?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) 1971 ஜூலை 18-ம் தேதி அன்று உத்தமபாளயம் வட்டம் மண்ணைபுரத்தில் ஒரு மின் உதவியாளர் மின்சாரம் தாக்கி இறந்தார்.

(இ) இழப்பீடு ரூ. 7,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

(உ) விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு விதிமுறைகள் ஏற்கனவே உள்ளன. இந்த உதவியாளர் இவற்றை சரிவர அனுசரிக்காத தனுல்தான் இவ்விபத்து ஏற்பட்டது.

New posts in Tamil Nadu Electricity Board

* 105 *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of posts sanctioned in 1970–71 for attending to the employees provident fund work in Accounts Wing of the Tamil Nadu Electricity Board;

(*b*) whether all the posts have been filled up; and

(*c*) if not, the reasons thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குப்பிரிவில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதிப்பணியைக் கவனிப்பதற்காகப் பதவிகள் எதற்கும் 1970-71-ல் ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. இருந்தபோதிலும், மேற்சொன்ன, பணியைக் கவனிப்பதற்காகக் கீழ்க்கண்ட பணியாளர்களை நியமிக்க மின் வாரியம் 1969 செப்டம்பரில் ஒப்பளிப்பு வழங்கியிருந்தது :

உதவி கணக்கதிகாரி	1
கண்காணிப்பாளர்கள்	3
உதவியாளர்கள்	28
இளநிலை உதவியாளர்கள்	4
தட்டச்சர்	1
சிற்றெழுத்தர்	1
கடைநிலை ஊழியர்	2

(இ) ஆம்.

(உ) இவ்வினு எழவில்லை.

DR. H. V. HANDE : Sir, may I know whether the employees belonging to the Accounts Wing have made representations to the Government and if so, the details of the representations and the action taken by the Government on those representations?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை.